முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 177/2015

இன்று 2024 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 03 ம் நாள் இன்று இந்த வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : நித்தியானந்தம்

தந்தை பெயர் : சுப்பிரமணியம்

சாட்சி மீண்டும் முன்னிலையாகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) க.ச.எண்.136 ன் மொத்த விஸ்தீரணம் 7.90 ஏக்கர் ஆகும். மேற்படி சொத்துக்களை எனது தாத்தா ராய போயன் மகன் துரைசாமி மற்றும் இதர பாகஸ்தர்கள் சேர்ந்து கடந்த 1959 ம் வருடம் வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ன்படி என் தாத்தாவிற்கு வடமேற்கு மூலையில் 3.93 ஏக்கர் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் தாத்தா காலத்திலேயே கல் குழி அமைத்து, சுமார் 150 அடி ஆழத்திற்கு குவாரி அமைத்து விற்பனை செய்து வந்தார்கள் என்றால் சரிதான்.

2) என் தாத்தாவிற்கு கண்ணம்மாள், பூவாத்தாள் ஆகியோர் மனைவிகள் என்றால் சரிதான். என் அப்பா கண்ணம்மாளின் மகன் என்றால் சரிதான். என் தாத்தா கடந்த 23.07.1992 ம் ஆண்டு என் அப்பா மற்றும் இரண்டு மனைவிகள் பெயரில் ஒரு உயில் சாசனம் எழுதி வைத்திருந்தார் என்றால் சரிதான். அந்த உயில் சாசனம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். உயில் சாசனம் தற்போதும் என் கைவசம் இருக்கிறது. அசல் உயில் சாசனத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) என் தாத்தா கடந்த 2002 ம் வருடம் இறந்து விட்டார். தாவா சர்வே எண்கள் முழுவதும் மனையிடங்களாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு விட்டது

என்றால் சரிதான். எப்போது மனையிடங்களாக பிரிக்கப்பட்டது என்பது தொடர்பான விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. வரைபடம் எதுவும் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அங்கீகரிக்கப்படாத மனையிடங்களாக விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் காடு மற்றும் பாறை குழி என சாட்சி பதில் அளிக்கிறார்.

4) தாவா சொத்திற்கு எத்தனை ரோடுகள் இருக்கிறது, அதன் அளவு பற்றிய விவரங்கள் குறிப்பிட்டு சொல்ல முடியாது. மனையிடங்கள் விற்பனை செய்யப்பட்ட போது, பஞ்சாயத்திற்கு நிலம் எதுவும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எங்கள் பூமியின் வடமேற்கு மூலையில், எவ்வளவு விஸ்தீரணம் பாறைக் குழியாக இருந்தது என்று எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் சுமார் 65 செண்ட் என பதில் அளிக்கிறார். எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான வீட்டு மனை எதுவும் தற்போது இல்லை என்றால் சரியல்ல. ஒரே ஒரு மனையிடம் இருக்கிறது. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க சாட்சியின் தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-T.Praveenkumar
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.